சா.வடிவரசு



# கல்விக் கனவை நிறைவேற்றும் 'முகவரி'!

"வசதியற்ற கிராமத்துக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று, மருத்துவராகும் கனவோடும், அதுக்கான கதவுகள் அடைபட்டும் இருந்த ஒரு மாணவிக்கு உதவ நினைச்சேன். அந்த சின்ன முயற்சிதான், இன்னிக்கு பெரிய செயல்வடிவம் பெற்று 'முகவரி' அமைப்பை உருவாக்கியது. ஆரம்பித்த 9 வருடங்களில், 240 கிராமப்புற மாணவர்களோட கல்விக்கு கைகொடுத்து, அவங்க வாழ்க்கையில் ஒளியேற்றியிருக்கு 'முகவரி'!"

- வார்த்தைகளில் கனிவுடன் சொன்னார், ரமேஷ். 'முகவரி' அமைப்பின் நிறுவனர்! சென்னை, வேளச்சேரியில் உள்ள, மேயர் சைதை துரைசாமியின் இலவச திருமண மண்டப வளாகத்தில் இயங்கி வருகிறது, இந்த அமைப்பு.

"சேலம் மாவட்டம், ஆத்தூர் பக்கத்துல இருக்குற ஆரத்தி அக்ரஹாரம்தான் என் சொந்த ஊர். விவசாயக் கூலிக் குடும்பம். இந்த நிலையில சென்னை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில இதயக் கோளாறுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தாங்க என் சகோதரி. சிபாரிசோட வந்தவங்களுக்கு எல்லாம் உடனடி சிகிச்சை கிடைக்க, தேவையான சிகிச்சை உரிய நேரத்தில் கிடைக்காததால அவங்க உயிரை இழந்துட்டாங்க. அது எங்க குடும்பத்தை ரொம்ப பாதிச்சது.

நான் நாமக்கல் அரசு கலைக்கல்லூரில பி.எஸ்ஸி முடிச்சுட்டு, தொடர்ந்து சி.ஏ தேர்வுக்குத் தீவிரமா படிச்சுட்டு இருந்த 2003-ம் வருஷத்துலதான்... நல்ல மார்க்

எடுத்தும் மருத்துவக் கல்லூரியில் சேரமுடியாத துர்நிலைமை கஸ்தூரி என்ற மாணவிக்கு. ஏழ்மையில் இருந்து டாக்டரா உயரக்கூடிய ஒருவர், தங்களைப் போல ஏழைக் குடும்பங்களோட சிரமங்கள் புரிந்து உதவி செய்வாங்கனு நம்பினேன். அது, கஸ்தூரியை டாக்டராக்கும் என் முயற்சியை பலப்படுத்துச்சு.

அந்தச் சமயத்துல வெளிவந்திருந்த 'ரமணா' திரைப்படத்தைப் பார்த்துட்டு, அந்த இயக்குநர் சமூக அக்கறை உள்ளவராதான் இருப்பார்னு, ஏ.ஆர். முருகதாஸ் சாரை பல போராட்டங்களுக்குப் பிறகு சந்திச்சேன். என் நம்பிக்கையை மெய்யாக்கி அவரும் கஸ்தூரிக்கு உதவ முன்வர, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்த்தோம். இதைக் கேள்விப்பட்ட பல ஏழைக் குடும்பங்கள், 'மதிப்பெண் இருக்கு, பணமில்லை; உதவுங்க!'னு எங்கிட்ட வந்து நின்னாங்க. உதவி பெற்றுத்தரும் பாலமா நான் ஓடிட்டு இருந்தப்போதான், இதையே அமைப்பா தொடங்குற எண்ணம் வந்துச்சு!" எனும் ரமேஷ், இந்த அமைப்பை 2006-ம் ஆண்டு பதிவு செய்திருக்கிறார்.



"யுனிவர்சிட்டி கோல்டுமெடலிஸ்டான நான், சி.ஏ கனவை அடியோட விட்டுட்டு, 'திறமை இருந்தும் பணம் இல்லாததால பாதிக்கப்படும் கிராமத்து மாணவர்களுக்குக் கல்வி கிடைக்கச் செய்யணும்'கிறதையே வாழ்வின் லட்சியமாக்கி தீவிரமா செயல்பட ஆரம்பிச்சேன். இதுக்காக உதவிக் கேட்கப்போகும் இடங்களில் பல அவமானங்கள், புறக்கணிப்புகள்.. எல்லாத்தையும், தூசு போல கடந்துட்டே இருப்பேன். 'முகவரி' மூலாக முன்னேறிய மாணவர் வெற்றிவேல், என்னையும் மீறி நான் துவண்டுபோகும் போதெல்லாம் நம்பிக்கை சொல்லி நிமிர வெச்சிருக்கார்!" என்ற ரமேஷ்,

"முகவரி மூலமா படிப்பை முடிச்ச 40 பேர், இப்போ வேலைக்குப் போயிருக்காங்க. எங்க அமைப்பு மூலமா படிச்சு வேலைக்குப் போற ஒவ்வொருத்தரும் தங்களோட சம்பளத்துல 7 சதவிகித பணத்தை முகவரிக்கு தரணும்... இது மூலம் அடுத்த தலைமுறை கிராமப்புற ஏழை மாணவர்களையும் முன்னேற்றணும்னு உதவி பெற வரும் எல்லோருக்கும் வலியுறுத்துவோம். ஆனா, பலரும் டிகிரி வாங்குற கையோட, 'முகவரி'யை மறந்துடறாங்க. போன் செய்தால்கூட எடுக்க மாட்டாங்க. இருந்தாலும், மேயர் சைதை துரைசாமி, இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் போன்ற பல நல்ல மனுஷங்க தொடர்ந்து செய்துட்டு வர்ற உதவிகளால 'முகவரி' தொய்வில்லாம பயணிச்சுட்டு இருக்கு!" எனும் ரமேஷ், தன் சேவைக்காகவே திருமணம் செய்துகொள்ளவில்லை. விளம்பரத்துக்காக செய்வதாக யாரும் நினைத்துவிடக் கூடாது என்பதால் மீடியாவில் தன் புகைப்படத்தையும் தவிர்க்கிறார்.

"இந்தக் கல்வியாண்டுல 34 மாணவர்கள் மருத்துவமும், 22 மாணவர்கள் பொறியியலும் படிச்சுட்டு இருக்காங்க. எங்க அமைப்பு மூலமா மாணவர்கள் மட்டுமல்லாமல் 97 மாணவிகள் உதவி பெற்று வர்றாங்க. இதில் அதிகமானவர்கள் தாய், தந்தை இல்லாதவங்க. எஸ்.ஆர்.எம் போன்ற கல்லூரிகள் எங்களுக்கு இலவச ஸீட் கொடுத்து உதவி செய்றாங்க. பட்டப்படிப்புகள் மட்டுமில்லாம, ஐ.ஏ.எஸ் போன்ற போட்டித் தேர்வுப் பயிற்சிகளுக்கும் உதவிட்டு வர்றோம். இப்படி எங்களுடன் இணையும் கைகளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கோம்!"

– நன்றியும் நிறைவுமாகச் சொன்னார் ரமேஷ்!

## நன்றி கூறும் நெஞ்சங்கள்!



▲ பவித்ரா

**கோ**யம்புத்தூரில் பொறியியல் படித்து வரும் **பவித்ரா:** "என் அப்பா, அம்மா ரெண்டு பேரும் ஹெச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்பட்டு இறந்துட்டாங்க. உறவினர்களோட உதவியோடதான் பள்ளிப் படிப்பை முடிச்சேன். அதுக்கு அப்புறம் வழி தெரியாம நின்னப்போதான், 'முகவரி'யின் ஆதரவு கிடைச்சு, இப்போ பி.இ படிச்சிட்டு இருக்கேன். நான் நல்லா படிச்சு, வேலைக்குப் போய், என்னைப் போன்ற பல மாணவர்களின் படிப்புக்கு நானும் உதவுவேன்!" என்கிறார் சந்தோஷமாக.



▲ பானுப்ரியா

**டெல்லியில் ஐ.ஏ.எஸ். பயிற்சி வகுப்பில் சேர்ந்திருக்கும் பானுப்ரியா:** "என்னோட அப்பா, தெருத்தெருவா துணி எடுத்துட்டுப் போய் விக்கிறார். கல்லூரிப் படிப்புக்கு 'முகவரி'யை நம்பிப் போய் நிக்க, அவங்களோட உதவியால சென்னை எம்.ஐ.டி-யில பொறியியல் முடிச்சு, இப்போ டெல்லியில ஐ.ஏ.எஸ். கோச்சிங் போயிட்டிருக்கேன். இப்படி நிறைய பேர் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கோம்!" என்கிறார் நெகிழ்ச்சியுடன்.



நீண்ட ஆரோக்கியமான கூந்தலுக்கு,
கூந்தல் பராமரிப்பில் - கேசவர்த்தினி!
(Mix Kesavardhini concentrate with coconut oil and apply on scalp for amazing results).
Kesavardhini
Natural hair care for generations !